DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 74/2019

Prosecution witness – PW.2

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு. கண்ணதாசன் | Caste: | |
| Father's Name | : நாகலிங்கம் | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

18.06.2025 – 01.15 PM

எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**சாட்சி கு.வி.மு.ச. பிரிவு 311ன் கீழ் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**:–

1. நான் சோதனைக்கு சென்ற இடத்தில் யாரை எல்லாம் விசாரித்து எந்தெந்த ஆவணங்களை கைப்பற்றினேன் என்றால் நான் யாரையும் விசாரிக்கவில்லை. தாசில்தாருடன் சென்றேன். அவர் தான் விசாரித்தார். நான் உடன் இருந்தேன். தாசில்தார் சேம்பரிலிருந்த நபர்களிடம் அவர்கள் வேலைக்கு சேர்ந்த ஆவணம், சம்பளம் வாங்கிய இரசீதுகள் போன்றவற்றை கேட்டார். இதைத் தவிர்த்து வேறு ஆவணங்களை கேட்கவில்லை என்றால் சரிதான்.

2. என்னை தவிர்த்து வட்டாட்சியர், மண்டலத்துணை வட்டாட்சியர், சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர் ஆகியோரும் வந்தார்கள். தொழிலாளர் துறையிலிருந்து அதிகாரிகளோ, அதிகார வரம்புடைய போலீசாரையோ அன்றைய தினம் அழைத்துச் செல்லவில்லை என்றால் போலீசார் வந்தார்கள். ஆனால் தொழிலாளர் துறையிலிருந்து யாரும் வரவில்லை. சேம்பரின் உரிமையாளர் மூர்த்தி என்பதை விசாரணையிலிருந்து தெரிந்து கொண்டேன். சேம்பரில் இருந்த வேலையாட்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன். அவர்கள் கூறியதை நான் தனியாக பதிவு செய்யவில்லை. தாசில்தாரும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். நான் வேலையாட்கள் கூறி சேம்பரின் உரிமையாளர் மூர்த்தி என்பதை தெரிந்து கொண்டேன் என்று

பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

3. சேம்பரின் உரிமையாளர் மூர்த்தி என்பதை காண்பிப்பதற்கு எவ்வித ஆவணங்களும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். அன்றைய தேதியில் கைப்பற்றப்படவில்லை. பின்னதாக கைப்பற்றப்பட்டதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கொத்தடிமை தொழிலாளர்கள் என்று கண்டறிந்ததாக சொல்லப்படுகிற நிலையில் அவர்கள் எப்போது விடுவிக்கப்பட்டார்கள் என்றால் போலீசார் அவர்களை அழைத்துச் சென்றார்கள். எப்போது விடுவித்தார்கள் என்று எனக்கு தெரியாது.

4. நான் கூறியபடி சேம்பருக்கு தாசில்தாருடன் செல்லவில்லை என்றாலும், அங்கு கொத்தடிமைகளாக யாரும் கண்டறியப்படவில்லை என்றாலும், சேம்பரின் உரிமையாளர் யார் என்பதை நான் தெரிந்து கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. அரசு தரப்பிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்./–திருமதி. G. தங்க கார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.